**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 87/2014**

**வாதி தரப்பு சாட்சி–1 வெள்ளையம்மாள் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 24.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இவ்வழக்கு தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை கோரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது சித்தி தும்மாயிஅம்மாளுக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தும்மாயி அம்மாளுக்கு மேற்படி சொத்து நேரடியாக பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. தும்மாயி அம்மாள் கணவர் பெயர் நல்லப்பரெட்டியார் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை ஆரம்பத்தில் பிரதிவாதிகள் எனது சுவாதீனத்திற்கு இடையூறு கொடுக்கக்கூடாது என்றுதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். (வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**